**செய்தி வெளியீடு எண்: 516** **நாள்:20.08.2019**

**<u>செய்தி வெளியீடு</u>**

**<u>இன்று (19.08.2019), மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் சேலம் மாவட்டம், கெங்கவல்லியில் முதலமைச்சரின் சிறப்பு குறை தீர்க்கும் திட்டத்தினை துவக்கி வைத்து நலத்திட்ட உதவிகள் வழங்கி ஆற்றிய உரை:</u>**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,

இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெற்றிருக்கின்ற அத்தனைபேருக்கும் முதற்கண் எனது பணிவான வணக்கத்தை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைய தினம், தமிழகத்தில் இருக்கின்ற ஏழை, எளிய மக்களின் குறைகளை விரைந்து தீர்ப்பதற்கு மாண்புமிகு அம்மாவின் அரசு அதிக முன்னுரிமை கொடுத்து, "முதலமைச்சரின் சிறப்பு குறை தீர்க்கும் திட்டம்" செயல்படுத்தப்பட்டு வருகிறது. மனுதாரர்களின் தகுதியான மனுக்களுக்கு நிவர்த்தி காணப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மனுதாரர்களின் பெரும்பாலான மனுக்கள் முதியோர் ஓய்வூதியம் கோரிய மனுக்களாகத்தான் இருக்கின்றது. வயது முதிர்ச்சியால் உழைக்க முடியாத முதியோர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தை அம்மாவின் அரசு செயல்படுத்திக் கொண்டிருக்கின்றது. இதன் மூலம், புதிதாக, தகுதியான 5 இலட்சம் முதியோர்களுக்கு ஓய்வூதியம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்கும் என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், இம்முகாம்களில் வீட்டுமனைப் பட்டா, பட்டா மாறுதல்களும் செய்து கொடுக்கப்படுகிறது.

வீடில்லாத ஏழை மக்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பதை இலட்சியமாக எண்ணி அம்மா அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. பிரதம மந்திரியின் வீடு கட்டும் திட்டத்தின் கீழ், மத்திய, மாநில அரசுகள் இணைந்து, வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும் வீடில்லா மக்கள் அனைவருக்கும் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும்.பேரூராட்சிப் பகுதிகளில் வாழும் மக்களுக்கு அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டித்தர நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இதனை விரைவாக செயல்படுத்த, அம்மாவின் அரசு திட்டமிட்டு செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது.

கெங்கவல்லி சட்டமன்றத் தொகுதி வேளாண் பெருமக்களின் வேளாண்மைத் தொழில் சிறக்க வேண்டும், இரட்டிப்பு வருமானம் கிடைக்க வேண்டுமென்பதற்காக,

அம்மாவின் அரசு புதிய, புதிய யுக்திகளைக் கையாண்டு, அதனை விவசாயிகளுக்கு அறிமுகப்படுத்தி வருகிறது. விவசாயப் பெருங்குடி மக்களுக்கு கூட்டுப் பண்ணைத் திட்டம், வட்டியில்லா பயிர்க் கடன் போன்றவை வழங்கப்படுகிறன.

பருவகாலங்களில் பொழிகின்ற மழை நீர் ஒரு சொட்டுகூட வீணாகாமல் சேமிக்க, குடிமராமத்துத் திட்டத்தின் மூலம் முதற்கட்டமாக, பரீட்சார்த்த முறையில், 2017–2018ஆம் ஆண்டில் ரூபாய் 100 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு 1519 ஏரிகளும், இரண்டாம்கட்டமாக 2018–2019ஆம் ஆண்டில் ரூபாய் 328 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு 1511 ஏரிகளும் தூர்வாரப்பட்டுள்ளன. 2019–2020ஆம் ஆண்டில் சுமார் ரூபாய் 500 கோடி ஒதுக்கீடு செய்து 1829 ஏரிகளில் தூர்வாரும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டத்தில், முழுக்க முழுக்க விவசாயிகளையும், ஆயக்கட்டுதாரர்களையும் குழுவாக உருவாக்கி, அக்குழுவின் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பொதுப்பணித் துறை மற்றும் ஊராட்சி ஒன்றியங்களின் கட்டுப்பாட்டில் 39,000 ஏரிகள் உள்ளன. ஒவ்வொரு ஆண்டும் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையிலான ஏரிகளை எடுத்து தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

ஊராட்சி ஒன்றியங்களின் கட்டுப்பாட்டில் உள்ள குளங்கள், குட்டைகள், ஊரணிகளில் தண்ணீரை சேமிக்க ரூபாய் 1,250 கோடி மதிப்பீட்டில் திட்டம் தீட்டப்பட்டு, அப்பணிகளும் துவங்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு முழுவதும் இத்திட்டம் செயல்படுத்தப்படுவதால், பொழிகின்ற மழை நீர் சேமிக்கப்படுவதுடன், நிலத்தடி நீர் உயரக்கூடிய வாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளது. உடலுக்கு உயிர் முக்கியம் போல் விவசாயத்திற்கும், மக்களுக்கும் நீர் முக்கியம். எனவே, இத்திட்டத்தில் விவசாயப் பெருங்குடி மக்களும், விவசாயத் தொழிலாளர்களும், பொதுமக்களும் முழுமையாக தங்களை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கண்ணுக்கு இமை போல ஏரிக்கு இமையாக இருந்து இத்திட்டம் வெற்றியடைய ஒத்துழைக்க வேண்டும்.

விவசாயிகளின் உபதொழிலான கால்நடை வளர்ப்பு சிறக்க வேண்டுமென்பதற்காக ஆசியாவிலேயே மிகப் பெரிய பிரம்மாண்டமான கால்நடைப் பூங்கா சேலம் மாவட்டத்தில் கிட்டத்தட்ட 1200 ஏக்கர் பரப்பளவில் உருவாக்கப்படும். அங்கே கால்நடை மருத்துவமனை, கால்நடை ஆராய்ச்சி நிலையம் உருவாக்கி, கலப்பின

பசுக்கள், ஆடுகள் உருவாக்கி விவசாயிகளுக்கு கொடுக்கிறோம், மேலும், பன்றிகள், மீன், கோழிகள் ஆகியவற்றை வளர்த்துக் கொடுத்து, விவசாயிகளுடைய வருமானத்தை இரட்டிப்பாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பால் உற்பத்தி பெருக்குவதை கருத்தில் கொண்டு, ஊட்டியில் விந்தணுவில் பாலினம் பிரிக்கும் ஆய்வகம் ரூபாய் 48 கோடியில் அமைக்கப்பட உள்ளது.

விவசாயிகளின் விளைபொருட்களுக்கு உரிய விலை கிடைப்பதற்கு, தனியார் பங்களிப்புடன் சென்னைக்கு அருகிலே ரூபாய் 2000 கோடியில் மிகப் பெரிய உணவுப் பூங்கா ஒன்று உருவாக்கப்பட உள்ளது. மேலும், விவசாயிகளின் விளைபொருட்களை பாதுகாப்பாக சேமித்து வைக்க குளிர்பதனக் கிடங்கு விரைந்து அமைத்துக் கொடுக்கப்படும். இத்திட்டங்கள் சிறப்பாக செயல்படுவதற்கு, விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற காய்கறி, பழங்களை On–line மூலமாகவும் விற்பனை செய்து கொள்ளலாம்.

ஓடைகள், நதிகளின் குறுக்கே தடுப்பணைகள் கட்டுவதற்கு, 3 ஆண்டுகாலத் திட்டமாக ரூபாய் 1000 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இரண்டாண்டு காலத்தில் தடுப்பணை கட்டுவதற்கு ரூபாய் 600 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

அம்மாவின் அரசு, சேலம் மாவட்டத்திலேயே அதிகமான பாலங்களை கெங்கவல்லியில் கட்டிக் கொடுத்துள்ளது. தலைவாசல் ஒன்றியத்தில் காட்டுக்கோட்டை பாலம் ரூபாய் 2 கோடியிலும், மணிவிழுந்தான் பாலம் ரூபாய் 2 கோடியே 10 இலட்சத்திலும், கோவிந்தம்பாளையம் பாலம் ரூபாய் 6 கோடியிலும், புதூர் பாலம் ரூபாய் 2 கோடியிலும், காவர்பனை பாலம் ரூபாய் 3 கோடியிலும், வீரகனூர் பாலம் ரூபாய் 3 கோடியிலும், 74–கிருஷ்ணா பாலம் ரூபாய் 3 கோடியிலும், ஜங்கமசமுத்திரம் பாலம் ரூபாய் 2 கோடியிலும் என பல்வேறு பாலங்களை அம்மாவின் அரசு கட்டிக் கொடுத்துள்ளது.

கடந்த 2011–ஆம் ஆண்டு முதல் இதுவரை கெங்கவல்லி சட்டமன்றத் தொகுதியில் பல்வேறு பணிகள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன.

ஊரக வளர்ச்சித்துறையின் மூலம் ரூ.229 கோடி மதிப்பீட்டில் 33,108 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வருவாய்த்துறையின் மூலம் ரூ.13.00 இலட்சம் மதிப்பீட்டில் தலைவாசல் வருவாய் ஆய்வாளர் அலுவலகம் மற்றும் குடியிருப்பு கட்டடம் கட்டப்பட்டுள்ளன.

சுகாதாரத் துறையின் மூலம் ரூ.97.00 இலட்சம் மதிப்பீட்டில் 4 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு கூடுதல் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.

நெடுஞ்சாலைத்துறையின் மூலம் ரூ.100 கோடி மதிப்பீட்டில் புதிய பாலம் மற்றும் 239 கி.மீ. சாலைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், ரூ.10 கோடி மதிப்பீட்டில் சாலைகளை அகலப்படுத்தி புதுப்பிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் ரூ.5 கோடி மதிப்பீட்டில் குடிநீர் திட்டப்பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. மேலும், ஆத்தூர், நரசிங்கபுரம் நகராட்சிகள் 20 பேரூராட்சிகள் மற்றும் 12 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 1,345 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் ரூ.270 கோடி மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கூட்டுறவுத்துறையின் மூலமாக விவசாயப் பெருமக்களுக்கு பயிர்க்கடன், மத்திய காலக்கடன், நகைக் கடன், மாற்றுத் திறனாளிகள் மற்றும் சுய உதவிக் குழுக்களுக்கு கடனாக ரூ.7,54,967 நபர்களுக்கு ரூ.2,640 கோடி வழங்கப்பட்டுள்ளது.

கால்நடை பராமரிப்புத்துறையின் மூலம் ஏழை, எளிய மக்களுக்கு விலையில்லா வெள்ளாடுகள், செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டமும், புறக்கடை கோழி வளர்ப்புத் திட்டமும் அம்மாவின் அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கடந்த 8 ஆண்டுகளில் கெங்கவல்லி சட்டமன்றத் தொகுதியைச் சேர்ந்த 3,934பயனாளிகளுக்கு ரூ.50 கோடி மதிப்பீட்டில் விலையில்லா ஆடுகளும், வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள 400 கிராமப்புற பெண்களுக்கு ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் கோழிக் குஞ்சுகளும் வழங்கப்பட்டுள்ளன.

வேளாண்மைத்துறையின் மூலம், ரூ.57 கோடி மதிப்பீட்டில் 1,04,492 விவசாயிகளுக்கு விவசாய பண்ணை இயந்திரங்கள், கருவிகள், விதைகள், சொட்டு நீர் பாசன மானியம், இடுபொருட்கள் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையின் மூலம், ரூ.54 கோடி மதிப்பீட்டில் 10,976 விவசாயிகள் பயன்பெறும் வகையில் சொட்டுநீர் பாசனம் மானியம், காய்கறி விதைகள், பழச்செடிகள், தேனீ வளர்ப்பு உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகளும் வழங்கப்பட்டுள்ளன. பருவ மழை பொய்த்ததன் காரணமாக தோட்டக்கலை பயிர் சாகுபடி செய்த 6,568 விவசாயிகளுக்கு ரூ.3.72 கோடி வறட்சி நிவாரண இடுபொருள் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

கெங்கவல்லி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு ரூ.82 இலட்சம் மதிப்பீட்டில் 25 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட குளிர்பதன கிடங்கு மற்றும் பரிவர்த்தனைக்கூடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

விலையில்லா மடிக்கணினிகள் ரூ.21 கோடி மதிப்பீட்டில் 19,333 மாணவ / மாணவியர்களுக்கும், விலையில்லா மிதிவண்டிகள் ரூ.6 கோடி மதிப்பீட்டில் 17,976 மாணவ / மாணவியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. வருவாய் ஈட்டும் பெற்றோர்களை இழந்த 50 மாணவ / மாணவியர்களுக்கு ரூ.26 இலட்சம் நிதியுதவியாக வழங்கப்பட்டுள்ளது. இடைநிற்றலை தவிர்க்க 10 முதல் 12–ஆம் வகுப்பு வரை பயிலும் 19,333 மாணவ / மாணவியர்களுக்கு ரூ.9.70 கோடி சிறப்பு ஊக்கத்தொகையாக வழங்கப்பட்டுள்ளது. 35 அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளுக்கு ஆய்வக உதவியாளர்கள் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர். 40,851 மாணவ / மாணவியர்களுக்கு விலையில்லா பேருந்து பயண அட்டை வழங்கப்பட்டுள்ளது. இலத்துவாடி, வேப்பம்பூண்டி, நடுவலூர் ஆகிய ஊராட்சி ஒன்றியப் நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், செந்தாரப்பட்டி, ஊனத்தூர், கொண்டையம்பள்ளி ஆகிய அரசு உயர்நிலைப்பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. ரூ.8 கோடி மதிப்பீட்டில், பள்ளிகளுக்கு புதிய கட்டடங்கள், மேல்நிலை ஆய்வகங்கள் கழிப்பறைகள், குடிநீர்த் தொட்டிகள் மற்றும் சுற்றுச்சுவர் கட்டப்பட்டுள்ளன.

அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் சார்பில் ரூ.1.80 கோடி மதிப்பீட்டில் பள்ளிகளில் கழிப்பறைகள் கட்டப்பட்டுள்ளன. ரூபாய் 3.14 கோடி மதிப்பீட்டில் இடைநிலை கல்வி இயக்கத்தின் சார்பில் பல்வேறு பள்ளிகளில் ஆய்வகங்கள், வகுப்பறைகள் மற்றும் கழிப்பறைகள் கட்டப்பட்டுள்ளன. ரூ.5.63 கோடி மதிப்பீட்டில்

பெத்தநாயக்கன்பாளையம் மாதிரிப்பள்ளிக்கு ஆய்வகம், வகுப்பறை கட்டடங்கள் மற்றும் கழிப்பறைகள் கட்டித் தரப்பட்டுள்ளன. கெங்கவல்லி சட்டமன்றத் தொகுதியில் நடப்பாண்டில் 4 அரசு உயர்நிலைப்பள்ளி மற்றும் மேல்நிலைப்பள்ளிகளுக்கு ரூ.72 கோடி மதிப்பீட்டில் பல்வேறு பணிகள் நடைபெற்று வருகின்றன.

படித்த ஏழைப்பெண்களுக்கு ரூ.25,000/- நிதியுதவியுடன் தாலிக்குத் தங்கம் வழங்கும் திட்டத்தின் கீழ் 2,241 பயனாளிகளுக்கு ரூ. 5.60 கோடி நிதியுதவியும், 9,828 கிராம் தங்கமும் வழங்கப்பட்டுள்ளது. மேலும், பட்டம் / பட்டயம் படித்த ஏழைப் பெண் ரூ. 50,000/- நிதியுதவியிடன் தாலிக்குத் தங்கம் வழங்கும் திட்டத்தின் கீழ் 1,526 பயனாளிகளுக்கு ரூ. 7.63 இலட்சம் நிதியுதவியும், 7,172 கிராம் தங்கமும் வழங்கப்பட்டுள்ளது. பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 917 பயனாளிகளுக்கு ரூ.2 கோடி நிதியுதவியாக வழங்கப்பட்டுள்ளது.

மேலும் பல திட்டங்களை மக்களுக்காக அம்மாவின் அரசு செயல்படுத்திக் கொண்டிருக்கின்றது. ஆனால், எதிர்க்கட்சிகள் அம்மா அரசுக்கு களங்கம் ஏற்படுத்துவதற்காக வேண்டுமென்றே, திட்டமிட்டு, தவறான, பொய்யான செய்தியை பரப்பி வருகின்றார்கள். அம்மாவின் அரசு மக்களின் அரசு, மக்களுக்கான திட்டங்களை அளிப்பது தான் இலட்சியம். அந்த இலட்சியப் பாதையில் அம்மாவின் அரசு சென்று கொண்டிருக்கின்றது. பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டு வந்த திட்டங்களை சிந்தாமல், சிதறாமல் மக்களின் இல்லங்களுக்கு கொண்டு சேர்க்கின்ற அளவிற்கு அம்மாவின் அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது.

மிகச் சிறப்பாக, எழுச்சியாக இந்த நிகழ்ச்சியை ஏற்படுத்திக் கொடுத்த அனைவருக்கும் என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்து விடைபெறுகின்றேன்.

நன்றி.

வணக்கம்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**